அவர்களுக்கு மட்டும் உரியதாயிராமல் சுவிசேஷத்தக் கேட்க மனதுள்ள யாவருக்கும் அது கிடக்கக் கூடியதாக உள்ளது.

அந்த 70 வாரங்களுக்குப் பிறகு தத்தளிப்பும் துன்பமும் தானியேல் 9:26,27இல் சொல்லப்பட்டபடி அவர்களுக்கு வந்தது. ரோம பிரபு வந்து, ஒரு வெள்ளத்தால் சேதம் அடவது போல, ஆலயத்தயும், நகரத்தயும் அழித்து, பேரிழப்பயும் அழிவயும் ஏற்படுத்திசென்றான். அவர்களால் மறுதலிக்கப்பட்ட மேசியா அவர்கள் மேல், பலவித தீமகள வரவிட்டார். அவர்களுக்குத்தேவயான அளவுக்கு நிர்ணயம் பண்ணப்பட்ட காலம் வுர அதாவது ''எருசலேமுடன் பட்சமாய் பேசி அதின் போர் முடிந்தது என்றும், அதன் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும் அதற்கு கூறுங்கள்'' (ஏசாயா 40:2) என்று அவர் சொல்ம் வுர, அந்தத் தீமகள் அவர்கள் மேல் தொடர்ந்து இருக்கும். இந்த இடப்பட்ட நேரத்தில், நிர்ணயிக்கப்பட்டு இருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும், அதாவது பாத்திரம் வருத்தத்தால் நிறந்து அவர்கள் ''கர்த்தருடய நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்'' என்று அவர்கள் சொல்ம் வுரக்கும், தீமகள் கொடுக்கப்படும். இப்போதே இஸ்ரயேலின் மீட்பு அல்லது விடியற்காலம் உதயமாவதால் தேவனுக்கு நன்றி. அவர்களுடய பாழ்கடிப்பும் துன்பமும் முடிவுக்கு வராவிட்டாம், தன் ஒரே பேரான பிள்ளக்காக புலம்புகிறது போல, அவருக்காக புலம்புகிற வேளயில், (சகரியா 12:10), அவர்கள் தாங்கள் குத்தினவுர, தங்களது தப்பெண்ணத்துடன் கூடிய குருடான மனதுடன், மங்கலாக காணும்படியான காலகட்டத்திற்கு ஒவ்வொரு மணி நேரமும் அவசரப்படுத்துகிறது.

நாம் இங்கே ஆராய்ந்த வேத வசனத்தப் படிக்கும் போது சிலர் தீர்க்கதரிசன வார்த்தகளின் அமப்புகள சரியாகப் புரிந்து கொள்வதில் தோல்வியுற்று குழப்பத்திற்கும் தவறுக்கும் ஆளாகின்றனர். மேசியாவுடன் ரோம பிரபுவ குழப்பிக் கொள்கின்றனர். ஆகயால் இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில் இந்த வேதாகமப் பகுதியில் அடப்புக்குறிக்குள் போடப் பட்டிருக்கும் விளக்கங்கள மிகவும் சரியாகப் படிக்கும்படி நாம் யோசுன கூறுகிறோம்.



## அத்தியாயம் 4

# புறஜாதியாரின் காலம்

எது புறஜாதியாரின் காலம் என சொல்லப்படுகிறது? , அவற்றின் ஆரம்பம் , அவகளின் கால அளவு; அவகளின் முடிவு கி.பி. 1914 , இதனால் ஏற்படுகின்ற நிகழ்சிகள், இதத் தொடர்ந்து நடக்க வேண்டிய நிகழ்சிகள் , சொல்லர்த்தமான காலமும், அடயாளமான காலமும் , ஒரு குறிப்பிடத்தகுந்த முன்னடயாளம்தற்கால அறிகுறிகள் , தேவனுடய இராஜ்யம், புறஜாதியாரின் ஆளுகய அழித்தல் , ஆகயால் புறஜாதியார் இராஜ்யத்தின் அழிவுக்கு முன்னே தேவராஜ்யத்தின் ஸ்தாபகம் , கி.பி. 1914க்கு முன்பே , புறஜாதி இராஜ்யங்களால் ஏன் எதிர்க்கப் படுகிறதுகூடசியிலே எப்படி ஏன் எல்லோரும் சந்தோஷத்தோடே அத ஏற்றுக்கொள்வார்கள்,எல்லா ஜாதிகளாம் விரும்பப்பட்டவர் வருவார்.

''புறஜாதியாரின் காலம் நிறவேறும் வுரக்கும், எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.'' லூக்கா 21 : 24

தேவனுடய இராஜ்யத்திற்கு முன்னடயாளமாக இருந்த இஸ்ரயேல் இராஜ்யம் நீக்கப்பட்டது முதல் (எசேக்கியேல் 21:25,27) தேவனுடய உண்மயான இராஜ்யம் துவங்கும் காலம் வுரக்கும் உள்ள இடப்பட்ட உலக சரித்திரப் பகுதியத்தான், நம்முடய கர்த்தராகிய கிறிஸ்து ''புறஜாதியாரின் காலம்'' என்று அழக்கிறார். தேவனுடய அந்த இராஜ்யத்தின் துவக்கத்தில், கிறிஸ்து தமது வல்லமயின் தூதரோடும், அவருடய பரிசுத்தவான்களில் மகிமப்படத்தக்கவராயும் வருவார் (2 தெசலோனிக்கேயர் 1:9).

இந்த இடப்பட்ட (புறஜாதியாரின்) காலப்பகுதியில் உலகமானது புறஜாதியாரின் இராஜாங்கங்களால் ஆளப்பட வேண்டியதாயிருக்கிறது. மாம்சீக, மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் எல்லோரும், புறஜாதியாரின் காலம் முடியும் வுர, அவர்களது அதிகாரத்தின் கீழ் இருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தேவன் அந்த புறஜாதியாரின் அரசாங்கத்த அங்கீகரிக்காமலோ, அல்லது கட்டளயிடாமலோ இருந்தாம்கூட, அவர் அவர்களது ஆளுகய அனுமதிக்கிறார். மற்றொரு விதமாக சொல்வோ

மேயானால், தேவன் விவேகமான முடிவுகளுக்காக, அவர்களுடைய ஆளுகூய ஒருகுறிப்பிட்ட காலத்திற்கு அனுமதித்தார்.

இப்பூமிய கீழ்ப்படுத்தி, அத நீதியோடு ஆளக்கூடிய அதிகாரம் முதன்முதலில் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. (ஆதியாகமம் 1:28) ஆதாம் தவறியதால், பாவத்துக்குக்கீழான அந்த ஆளுக அவனிடமிருந்து நீக்கப்பட்டது. அடுத்து, இந்த உலகம் தேவதூதர்களுக்குக் கீழாக்கப்பட்டது. தேவதூதர்களில் சிலர், விழுந்து போன மானிடர மீட்பதற்குப் பதிலாக, தங்கள் ஆதிமேன்மயக் காத்துக் கொள்ளத்தவறி, பாவத்தில் விழுந்தனர். ஜலப்பிரளயத்திற்குப்பின்பு தேவன் ஆபிரகாமிடம், பாவத்துக் குள்ளாகி, மரிக்கின்ற மானிடருக்கு உதவ, அவனுடைய சந்ததியிலிருந்து, அதாவது அவர்களிடமிருந்து ஒரு மீட்புர, ஒரு இராஜாவாக எதிர்காலத்தில் எழும்பப் பண்ணுவதற்குரிய நோக்கத்த வெளிப்படுத்தி, ''உன்னுடைய சந்ததிக்குள்ளாக உலகமுனத்தும் ஆசீர்வதிக்கப்படும்'' என்று கூறினார்.

பூமியின் மீது, ஒரு உலகப் பொது இராஜ்யத்தப்பற்றிய முதலாவது கருத்து இதுதான். தேவனிடத்திலிருந்து வந்த இந்த கருத்து மற்றெல்லாரின் கருத்தவிட மேலானது. அது இந்த இராஜாவின் விசேஷித்த தகுதியயும், தனிப்பட்ட மேன்மயயும் தெரிவிக்கிறது. இந்த இராஜாவிற்கு கீழ்ப் பட்டிருப்பது, எல்லா மானிட வர்க்கத்திற்கும் மிகவும் நன்மயாக இருக்கும். இவ்வாறு ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட இந்த வாக்குத்தத்தமானது, ஆபிரகாமுடய பின் சந்ததியரான இஸ்ரேல் மக்களின் எண்ணத்திம், இருதயத்திம், நிறந்திருந்ததோடு மட்டுமல்லாமல், அவர்களின் இனத்தாராகிய மோவாபியருக்கும், ஏதோமியருக்கும் நன்கு தெரிந்திருந்தது என்பதில் சந்தேகமில்ல. இப்படிப்பட்ட நம்பிக்கயானது, மற்ற நாடுகளுக்கும் ஒரு வேள தெரியவந்திருக்கும். இக்கருத்தானது மற்ற நாடுகளுக்கும் தெரிந்திருக்குமேயானால், அவர்களும் ஆபிரகாம் சந்ததியாரப் போன்று, மற்றவர்கள ஆளவும், உபதேசிக்கவும், பிற நாடுகள ஆசீர்வதிக்கவும், உலகப்பொது ஆளுகூயப்பெறவும், பிரதான நாடாகவும் இருக்க வேண்டும் என்பதில் விருப்பம் உள்ளவர்களாக இருந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்ல.

ஓர் பொது உலக ஆளுகூய பெறவிரும்பும் இஸ்ரேலின் நம்பிக்க மற்றநாடுகளின் விருப்பத்திற்கு இசய அதற்குக் கொடுக்கப்படாமல், தேவனின் விருப்பத்தினாம், வல்லமயினாம், அவர்களுக்குக் கிருபயாகக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்து, மற்ற நாடுகளுக்கும்



கூட பரவியதாகக் காண்கிறோம். எல்லா சமயங்களிம், புறஜாதி இராஜாக்களும், மக்களும் தங்களுக்குக் கிடத்த ஆளுகயெல்லாம் அவர்கள் வணங்கிய தேவர்களால் கிருபயாக அவர்களுக்கு கொடுக்கப் பட்டது என்று எண்ணியதாகவும் பார்க்கிறோம். சிற்றரசர்கள், இளவரசர்கள் முதல் பெரிய வலிமமிக்க இராஜாக்கள், சக்கரவர்த்திகள் வுர இந்தக் கருத்தயே இன்னும் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உடலிம், உள்ளத்திம் எந்த அளவுக்கு வலிமயற்றவர்களாக இருக்கிறார்கள் என்புதயும், மற்றவர்களயும், தங்களயும் ஆளுவதற்கு, எந்த அளவுக்கு தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள் என்புதப்பற்றியும், அவர்கள் கவுலப் படாமல், முழு உலகத்தயும் ஆளுவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும், தங்களயும், தங்கள் குடும்பத்தயும் மட்டுமே தேவன் தேர்ந்தெடுத்தார் என்ற ,பத்தியக்கார எண்ணத்திலிருக்கின்றனர். எல்லாவித மக்களாம் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தக் கருத்திற்கு ஏற்ப பதக்கங்களிம், நாணயங் களிம், இராஜாங்கப் பத்திரிக்ககளிம் ''தேவனுடய கிருபயினால் உண்டான இராஜா'' என்ற வார்த்தகள் பொறிக்கப்பட்டு இருந்தன.

இஸ்ரயேலர் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உலக ஆளுகூய, நம்பிக்கயுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது, (விசேஷமாக தாவீது, சாலமோன் இராஜாக்களின் நாட்களில்) தாங்கள் எதிர்பார்த்திருந்தத சமீபத்தில் அடயப்போவதாக எண்ணினர். இந்த ஆளுகக்குரிய ஆவல், மற்ற எல்லா நாடுகளுக்குமிடயே பொதுவாக இருந்துவந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உண்மயான வித்து இராஜ்யபாரத்தப் பெற்றுக் கொள்ள வரும் வுர, இஸ்ரயேலிலிருந்து கிரீடத்தத் தேவன் நீக்கிப்போட்டு, அதப் புறஜாதியாரின் ,கயில் ஒப்புவித்து, தற்போதய பாவ உலகத்த தங்களுடய சொந்த முயற்சியினால் ஆளும்படி செய்து, அதன் பயனின்மய உலகம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் தீர்மானித்தார். தேவதூதர்கள் இவ்வுலகத்த ஆளவும், ஆசீர்வதிக்கவும் தகுதியற்றவர்கள் என்புத ரூபகாரப்படுத்து வதற்காக, ஆதாமினால் இழக்கப்பட்ட இவ்வுலக ஆளுகூய, தேவன் தேவதூதர்களுக்கு கீழ்ப்படுத்தியது போல, இப்போது இத புறஜாதி மக்களுக்கும் கீழ்ப்படுத்தி, தம்முடய உதவியின்றி அவர்களது பல்வேறு சொந்த முறகளினால் இவ்வுலக ஆள அனுமதித்தார். அவருடய மகிமக்குரிய காரியங்கள நிறவேற்றப்போகும் உரிமக்காரனானவர் வரும் வுரக்கும் உள்ள இடப்பட்டக் காலத்தில், தேவன் இவ்வுலகத்த பல்வேறு சோதனக்குக் கீழ்ப்படுத்தி, அதன் மூலம் அத்தியாவசியமும், மகத்துவமுமான பாடங்கள மனிதன் கற்றுக்கொள்ள செய்கிறார்.

மாம்ச இஸ்ரயேலருக்குப்பின் வந்த ஆவியின் இஸ்ரயேலராகிய சுவிசேஷ காலத்து மக்கள் ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி என்று 1 பேதுரு 2:9இல் உயர்வாக அழைக்கப்படுகிறார்கள். இம்மக்கள் குறித்தகாலத்தில் கிறிஸ்துவோடு, உலகத்த ஆட்சி செய்து அவர்ஙள ஆசீர்வதிக்கக்கூடிய நிலுமயிலிருப்பதால், இஸ்ரயேலரின் இராஜ்யம், கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு முன்னுடயாளமாக இருக்கிறது. மேம் இவ்வுலக ஆளுஙய புறஜாதிமக்களிடம் கொடுப்பதற்குரிய நேரம் வந்தபோதோ, தேவன், இஸ்ரயேலின் சிங்காசனம் இன்னும் அங்கீகரிக்கப் படாதபடி, அதனிடமிருந்து கிரீடத்த அகற்ற வேண்டியதாயிருந்தது. இஸ்ரயேலர், வீணான கிரியகள், விக்கிரக ஆராதன போன்றுவகளில், தேசிய சிறப்பு பெற்று, உலகப்பொது ஆளுஙக்கு அவர்கள் உயர்த்தப்படத் தாங்கள் தகுதியற்றவர்கள் என்று ரூபகாரப்படுத்தியதால், ஆளுஙய தேவன் புறஜாதிகளுக்கு ஒப்புக்கொடுத்தார். இப்படிப்பட்ட காரியங்கள் சிதேக்கியா இராஜாவின் காலத்தில் நடபெற்றது. தெய்வீக உத்தரவானது தீர்க்கதரிசியின் மூலமாக பின்வருமாறு சொல்லப்படுகிறது. ''பாஙயக் கழற்று, கிரீடத்த எடுத்துப்போடு, அது இனி முன் போலிராது; தாழ்ந்தவுன உயர்த்தி; உயர்ந்தவுனத் தாழ்த்துவேன்; அதக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; அது உரிமக்காரனானவர் வருமட்டும், அது இல்லாதிருக்கும் அவருக்கே அதக்கொடுப்பேன்'' என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார் (எசேக் 21:24,27).

ஆளுஙய அல்லது கிரீடத்தக் கவிழ்ப்பது நிறவேறிவிட்டது. அந்த ஆளுஙக, முதலில் பாபிலோனுக்கும், பிறகு மேதிய பெர்சிய, கிரேக்க, ரோம ராஜ்யங்களுக்கும் கொடுக்கப்பட்டது. நேபு காத்நேசார் கண்ட பெரிய சிலதரிசனத்தின் மூலமாகவும், தானியேல் கண்ட நான்கு மிருகங்களின் தரிசனத்தின் மூலமாகவும், கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசன விளக்கங்களுக்கு சரித்திர ஏடுகளில், இந்த இராஜ்யங்களின் தன்மஙளக்குறித்து சொல்லப் பட்டுவகள் மிகவும் பொருந்தியிருக்கின்றன என்று நாம் காண்கிறோம். இஸ்ரயேுலயும், இவ்வுலஙயும் ஆளக்கூடிய உரிமக்காரரும், ஆதத் தம்முடய சொந்த விலயேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்தவருமாகிய கிறிஸ்து வந்து, அந்த இராஜ்யத்தின் அதிகாரத்த எடுத்துக்கொள்ளும் வுரக்கும், இஸ்ரேல் இராஜ்யம் கவிழ்க்கப்பட்டிருக்கும். நாம்பார்த்தபடி, கிறிஸ்துவின் இராஜ்யமானது 5ஆவது உலகப்பொது இராஜ்யமாக (அதாவது தேவனுடய இராஜ்யமாக) வானத்தின் கீழெங்கும் இருக்கும். தேவனால் அங்கீகரிக்கப்படாமல், குறித்தகாலத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட



முந்தின நான்கு இராஜ்யங்ஙளப்போல் அல்லாமல், இந்த 5ஆவது இராஜ்ய மானது தேவனால் அங்கீகரிக்கப்பட்டும், ஸ்தாபிக்கப்பட்டும், அவருடய பிரதிநிதியாக பூமியிலிருக்கும். அதுதேவனுடய இராஜ்யமாகவும், யேகோவா தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவருடய, இராஜ்யமாகவும் இருக்கும். மிகப்பெரிய குழப்பத்தின் மத்தியில் முற்றிமாக விழுங்கப்பட அல்லது நீக்கப்படப் போகிற தற்போதய இராஜ்யங்களின் மத்தியிம், சுவிசேஷயுக முடிவில் நடக்கும் பெரியதுன்பத்தின் நாளிம், தேவனுடய இராஜ்யம் கொஞ்சம் கொஞ்சமாக ஸ்தாபிக்கப்படும்.

இந்த அதிகாரத்தில் புறஜாதியாரின் ஆளுஙக கி.பி. 1914இல் முடிவுடந்தது என்பதற்கான வேத ஆதாரத்தயும், அந்தநாள் பூரணமற்ற மனிதர்களின் ஒன்றுக்கொன்று முரணான ஆட்சியக்காணும் என்பதற்கான ஆதாரத்தயும் நாம் இங்கு தருகிறோம். இந்தக் காரியம் உண்மயென்று வேதத்தின் மூலம் நிரூபிக்கப்படுமேயானால், அது பின்வரும் காரியங்ஙள நிரூபிக்கும்.

1. 'உம்முடய இராஜ்யம் வருவதாக' என்று நம்முடய கர்த்தர் நமக்கு ஜெபிக்கும்படி கற்றுக்கொடுத்த அந்த தேவனுடய இராஜ்யம் அந்நாளிலே, இப்பூமியில் தற்போதய நிலயற்ற இராஜ்யங்களின் மத்தியில் தொடங்கப்பட்டு, அதன்பின் சீக்கிரத்தில் உறுதியாக ஸ்தாபிக்கப்படும்.

2. ஆளுஙயப் பெற்றுக்கொள்ள உரிமக்காரனானவர், பூமியின் முதல் இராஜாவாக அப்போது பிரசன்னமாவார் என்புதயும், அதுமட்டு மல்லாமல், அந்தநாளுக்கு (புறஜாதியாரின் முடிவு நாளுக்கு) குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே, அவர் பிரசன்னமாகியிருப்பார் என்புதயும், அவருடய பிரசன்னத்தால் இந்த புறஜாதி இராஜ்யங்கள் குயக்கலத்தப் போல உடக்கப்பட்டு, (சங் 2:9; வெளி 2:27) நொறுக்கப்பட்டு, அதற்குப்பதிலாக, அவருடய சொந்த நீதியுள்ள இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்புதயும் அது நிரூபிக்கும்.

3. புறஜாதி இராஜ்யங்கள் நீக்கப்படுவதற்கு சில காலத்திற்கு முன்பே, இராஜரீக ஆசாரியக்கூட்டமும், கிறிஸ்துவினுடய சரீரமுமாயிருக்கிற தெய்வீக அங்கீகாரம் பெற்ற கிறிஸ்துவின் சுபயின் ஙடசி அங்கத்தினர், துலயாகிய கிறிஸ்துவோடுகூட மகிமப்படுத்தப்படுவார்கள் என்புதயும் நிரூபிக்கும். ஏனெனில் ஒவ்வொரு அங்கமும், கிறிஸ்துவின் உடன் சுதந்திரராயிருந்து கிறிஸ்துவோடுகூட ஆளவேண்டியிருக்கிறது. எல்லா அங்கத்தினருமில்லாமல் அந்த இராஜ்யம் முழுமயாக ஸ்தாபிக்கப்பட முடியாது.

4. அந்தக் காலம் முதல் எருசலேமானது புறஜாதியாரால் மிதிக்கப்படாது என்புதயும், அந்நகரமானது தேவனின் சாபத்திலிருந்து நீங்கி மகிமக்கு உயர்த்தப்படும் என்புதயும் அது நிரூபிக்கும். ஏனெனில் அப்போது புறஜாதியாரின் காலம் முடிவுக்கு வந்திருக்கும்.

5. அந்த நாளிலிருந்தே இஸ்ரயேலரின் கடினமான மனது நீக்கப்பட ஆரம்பிக்கும். ஏனெனில் அவர்களுள் ஒருபங்குக்கு கடினமான மனது, புறஜாதியாரின் நிறவு உண்டாகும் வுரக்கும் நீடித்திருக்க வேண்டும் (ரோமர் 11:25). வேறுவிதமாக சொல்வோமேயானால், கிறிஸ்துவின் மணவாட்டி அல்லது அவருடய, சரீரத்தின் அங்கங்களாக புறஜாதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் தொுக நிறவாகும் வுரக்கும், இஸ்ரயேலருக்கு கடின மனது உண்டாயிருக்கும்.

6. உலக இராஜாங்கத்தின் மத்தியில் யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம், அப்போது உுசநிலுய அடைந்து இருக்கும். அப்போது மனிதர்கள் அமர்ந்திருந்து யேகோவாவே தேவனென்றும், அவர் உயர்ந்திருப்பார் என்புதயும் அறிந்து கொள்வார்கள் (சங்கீதம் 46:10). உருவக பாுஷயினால் சொல்லப்படும் அமளியான கடல்அலகள், வெந்துருகும் பூமி, நிலதடுமாறும் பர்வதங்கள், வெந்துபோகும் வானங்கள், ஆகிய இவகளெல்லாம் ஒழிந்துபோய், புதிய வானமும், புதிய பூமியும், துன்பத்தால் ஆலக்கழிக்கப்பட்டு வந்த மானிட வர்க்கத்தினரால் அங்கீகரிக்கப்பட ஏதுவாக, அவர்களுக்கு ஆசீர்வாதங்களுடன் ஆரம்பமாகும். ஆனால் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரும், உரிுமுயயும் நீதியான அதிகாரத்த உடயவருமானவுர, பெரும் ஆபத்துக் காலத்திலே இருக்கிற தேவனுடய பிள்ுளகளின் ஒருகூட்டம் முதலாவது அங்கீகரிக்கும் (இந்த வகுப்பாுர யுகங்களின் படத்தில் T என்று குறிப்பிடப் பட்டுள்ளது. முதல் புத்தகத்தில் பக்கம் 186லிருந்து 190 வுர பார்க்கவும்) பிறகு அந்த ஆபத்துக் காலத்தின் முடிவில், மாம்சீக இஸ்ரயேலரும் கூடசியாக மனுக்குலம் முழுவதும் அவுர அங்கீகரிக்கும்.

7. அந்த நாளுக்கு முன்பே தேவனுடய இராஜ்யம், பூமியில் ஸ்தாபகம் பெற அதிகாரம் பெற்று, புறஜாதியாருடய இராஜ்யங்கள உடைத்து, அந்த இராஜாக்களின் அதிகாரங்கள முற்றிமாக அது எடுத்துக்கொள்ளும் என்புத நிரூபிக்கும் (தானி 2:34) இரும்பும் களி மண்ணுமாகிய, இராஜரீக மதசம்பந்தமான அதிகாரங்கள தன்னுடய வல்லுமயினாம், தன் பிரதி நிதிகள் மூலமும் நொறுக்கி, அத தூற்றி விடும். அதே வேகத்தில் தன்னுடய அதிகாரமும் ஆளுுகயும் ஸ்தாபிக்கப்படும் என்புதயும் நிரூபிக்கும்.



## புறஜாதியாரின் கால ஆரம்பம் கி.மு. 606

''புறஜாதியாரின் காலம் நிறவேறும் வுரக்கும்'' என்கிற நமது கர்த்தரின் வார்த்தயிலிருந்து, புறஜாதியாரின் காலம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியக் கொண்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஏனெனில் அளவில்லாத வுரயுறயற்ற காலப்பகுதிய ''நிறவேறக் கூடிய காலப்பகுதி'' என்று சொல்ல முடியாது. ஆகவே புறஜாதியாரின் காலப்பகுதிக்கு ஒரு துவக்கம் என்பது இருந்தது. ஒரு குறிப்பிட்ட காலம் வுர நீடித்திருந்து, நியமிக்கப்பட்ட காலம் வரும் போது அது முடிவுறும்.

**குறிப்பு:** ''காலங்கள்'' என்ற சொல் மூலபாுஷயாகிய கிரேக்க மொழியிலே ,கரோஸ் (Kairos) என்பதாகும். இவ்வார்த்தக்கு சரியான பொருள் ஒருகுறிப்பிட்ட காலமாகும். இதே வார்த்தயத்தான் கீழ் வரும் வேதாகமப் பகுதிகளில் காலங்கள் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மாற்கு 1:15; 1தீமோத் 6:15; வெளி 12:14; அப் 3:19; 17:26. இதே வார்த்த அப்போஸ்தலர் 1:7இல் காலங்களும், வேுளகளும், (Seasons) என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

புறஜாதியாரின் காலத்தின் ஆரம்பம், வேதாகமத்தில் தெள்ளத் தெளிவாகு சொல்லப்பட்டு இருக்கிறது. புறஜாதியாரின் அதிகாரத்தின் குறிப்பிட்ட காலப்பகுதியின் அளுவ, வேதம் நமக்குக் கொடுத்திருக்குமே யானால், அந்த புறஜாதியாரின் காலம் எப்போது முடிவுடயும் என்புத நாம் நிசயமாய் அறிந்துகொள்ள முடியும். நிறவேறக்கூடிய இந்த குறிப்பிட்ட காலப் பகுதிய வேதம் நமக்குக் கொடுத்திருக்கிறது. அது எழுதப்பட்ட காலத்திம், அந்த குறிப்பிட்ட காலம் நிறவேறி சரித்திர நிகழ்சிகள் அத வெளிப்படுத்தும் காலம்வுரக்கும் கூட, அதப் புரிந்து கொள்ள முடியாதபடி வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. அதன் பிறகும்கூட, அதக்கவனமாக எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர்களும், உலக எண்ணத்தால் ஈர்க்கப்படாதவர்கள் மட்டுமே இதப்புரிந்து கொள்கிற அளவிற்கு வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

புறஜாதியாரின் காலம் கி.மு. 606இல் ஆரம்பித்து. கி.பி. 1914இல் முடிவுடகிற 2520 வருடங்களக் கொண்ட காலப்பகுதி என்பதற்கு வேத ஆதாரம் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் இருக்கிறது. உலகப் பொது ஆளுுக, புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்ட தற்காலிக அனுமதி என்று நாம் முன்னமே பார்த்தபடி, நேபுகாத்நேசாரின் காலத்திலிருந்து ஆரம்பித்தது. ஆனால் அவனுடய இராஜ்யபாரம் ஆரம்பித்தபோது அல்ல; கர்த்தரின்

முன்னடயாளமான இராஜ்யம் நீக்கப்பட்டு, முழு உலகத்தின் ஆளுகயும் புறஜாதியாரின் கயில் கொடுக்கப்பட்ட போது அது ஆரம்பித்தது. தேவனின் முன்னடயாளமான இராஜ்யத்தின் கடசி இராஜாவாகிய சிதேக்கியாவின் கிரீடம் நீக்கப்பட்ட நாள்தான், புறஜாதி இராஜ்யங்களின் ஆரம்பநாள் என்பது நிசயமாகத் தெரிகிறது.

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் வார்த்தயின்படி, (எசேக்கியேல் 21:2527) சிதேக்கியா இராஜாவிடமிருந்து கிரீடம் நீக்கப்பட்டது. நேபுகாத்நேசாரின் படை எருசலேமை முற்றுகயிட்டு, அத முற்றிமாக அழித்தது. கோரேஸ் இராஜாவின் முதலாம் வருடம் வர, அதாவது 70 வருடங்கள் வர எருசலேம் பாழாக்கி விடப்பட்டது. (2 நாளாகமம் 36:2123) எருசலேமானது மீண்டும் கட்டப்பட்டு, அது சிறயிருப்பிலிருந்து மீட்கப் பட்டாம் கூட, அதன்பிறகு இன்றய நாள் (இப்புத்தகம் ஆசிரியரால் கி.பி. 1889இல் வெளியிடப்பட்டது) வரக்கும் இஸ்ரேக்கு, ஒரு ராஜா இருந்ததில்ல. அவர்கள் தங்கள் தேசத்தயும், விடுதலயயும் கோரேஸ் இராஜாவிடமிருந்து திரும்பப் பெற்றும்கூட ஒருஜாதியாக பெர்சியர், கிரேக்கர், ரோமர்களுக்கு தொடர்சியாக அடிமப்பட்டே இருந்தனர். நமது கர்த்தரின் முதலாம் வருகயின் போது, அவர்கள் ரோம அடிமத் தனத்திலிருந்தார்கள். ரோமாபுரி சீசரின் கீழ் அதிகாரிகளாய் இருந்தவர்கள், பிலாத்தும், ஏரோதும் ஆவர்.

இந்த உண்மகளக் கொண்டு, நாம் புறஜாதியாரின் ஆரம்ப காலத்த உடனே கண்டு கொள்கிறோம். கோரேஸ் இராஜாவின் முதலாம் வருடம் கி.மு. 536 தான் என்பது தெளிவான சரியான தேதி என்ற அபிப்பிராயம் 'டோலமி கேனான்' (Ptolemys Cannon) ஐ ஏற்றுக் கொள்கிற, மதசம்பந்தமான சரித்திரங்களுக்கு இது மிகவும் இசந்து இருக்கிறது. எருசலேமின் பாழ்க்கடிப்புக்காலம் முடிந்து, அதின் மறுமலர்சி கி.மு. 536இல் ஆரம்பித்து இருக்குமேயானால், யூதராஜ்யம் கி.மு. 536லிருந்து சரியாக 70 வருடங்களுக்கு முன், அதாவது (கி.மு. 536+70) கி.மு. 606இல் தான் புறஜாதியாரின் காலம் ஆரம்பித்தது என்புத அது நமக்குத் தெரிவிக்கிறது.

இந்த புறஜாதி இராஜ்யங்களுக்கு ஒருகுறிப்பிட்ட காலம்வரக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரத்தக் குறித்து பார்க்கும் போது, அவகள் தோல்வியுற்று, கவிழ்க்கப்பட்டு, கிறிஸ்துவின் இராஜ்யத்தால் மேற்கொள்ளப் படும் என்றும், ஆனால் அந்த ''குறிப்பிட்டகாலம்'' அல்லது ''புறஜாதியாரின் காலம்'' முடிவதற்கு முன்பே, தேவன் அந்த ஆளுகய அவர்கள விட்டு



நீக்கி, அவரால் அபிஷேகம் பண்ணப்பட்டவருக்குக் கொடுக்கமாட்டார் என்புதயும் தெரிந்து கொள்கிறோம். அதே சமயத்தில் தேவனுடய இராஜ்ய மானது பெந்தேகொஸ்தே நாளின்போது தோற்றுவிக்கப்பட்டதாகவும், ரோம பேரரசானது, கிறிஸ்தவ மதத்திற்கு (போப்பு சபக்கு) மாற்றப்பட்டு, அது இராஜரீக, ஆவிக்குரிய அதிகாரங்களப் பெற்றதாகவும், தேவனுடய இராஜ்யம் முற்றிமாக ஸ்தாபிக்கப்பட்டதாகவும் கூறுகிற, தவறான போதகத் தால் இவ்வுலகத்த வழிநடத்துகிற போப்புமார்க்கத்தின் தப்புறயிலிருந்து நாம் காக்கப்படுகிறோம். புறஜாதியாரின் காலத்தப்பற்றிய தீர்க்க தரிசனங்களிலிருந்து, மேலே கூறப்பட்ட ரோமசபயின் கருத்துகளும் அக்கருத்தயே வலியுறுத்துகிற புராட்டஸ்டெண்ட் சபயின் கருத்துகளும், தவறானது என்று நாம் பார்க்கிறோம். போப்பு சபயாம், புராட்டஸ்டெண்ட் சபயாம், கிறிஸ்தவ நாடுகள் என அழக்கப்படுகிற நாடுகளின் ஆளுகய கிறிஸ்துவின் இராஜ்யம் என்று கூறுவதும் தவறானதாகும். அவகளெல்லாம் இவ்வுலக இராஜ்யங்களே. இந்த இராஜ்யங்கள் நில குலந்து, ஒற்றுமயின்றி, அராஜகத்தில் விழும்போது, கிறிஸ்துவின் இராஜ்யம், புறஜாதியாரின் கால முடிவில் ஸ்தாபிக்கப்படும். சில வருடங்களாக ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னேற்பாடுகள் நிலவி வந்தாம், புறஜாதியாரின் காலம் நிறவுடயும் போதுதான் கிறிஸ்துவின் இராஜ்யம் அவகள மேற்கொள்ளும்.

சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவினுடய இராஜ்யம் ஆரம்பக் கட்டத்திலிருந்து, ஆளுகக்குரிய வல்லம, சக, கிரீடம் ஆகியுவ இல்லாமல் செங்கோக்குரிய வாக்குத்தத்தத்த மட்டுமே பெற்று உலகத்தால் அங்கீகரிக்கப்படாமல், அப்போது அதிகாரத்திலிருந்த புறஜாதி இராஜ்யங்களுக்கு கீழ்ப்பட்டு இருந்தது. பரலோக இராஜ்யத்திற்குரிய சுதந்திரவாளிகள் கிறிஸ்துவோடு கூட அரசாள குறிப்பிட்டகாலம் வரும்வரக்கும், அவர்கள் மேற்கூறியது போலக் காத்திருக்க வேண்டும். ஆபத்துக்காலமாகிய இந்தயுகமுடிவில், அவர்கள் அதிகாரத்திற்கு உயர்த்தப்படுவார்கள். ஆனால், அவர்களின் நீதியான அரசாளுக புறஜாதிகளின் காலம் முடியும் முன்னே இருக்கமுடியாது. ஆகயால் சபயானது ஜெயத்திற்கும், மகிமயான ஆளுகக்கும் உரிய குறிப்பிட்டகாலம் வரும்வர பொறுமயோடு காத்திருப்பது, அதனுடய கடமயாகும். இவ்வுலகத்திலிருந்து பிரிந்து அந்நியரும், யாத்திரிகரும், பரதேசிகளுமாயிருந்து, தேவனுடய இராஜ்யத்தின் சுதந்தரவாளிகளாவுத

மட்டுமே நோக்கமாகக் கொண்டு, கடைசிகாலம் வரும்வரை பொறுமையோடு காத்திருக்க வேண்டும். புறஜாதி இராஜ்யங்கள் ஆளும்படி தேவன் அனுமதித்து இருப்பதால், கிறிஸ்தவர்கள் இந்த ராஜ்யங்களின் உண்மையான குணலட்சணங்களை உணர்ந்து, அவைகளை விட்டுப் பிரிந்து, அவர்களுக் குரிய மரியாதையைக் கொடுத்து அவர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இந்தக் கருத்தையே பவும் ரோமர் 13:1இல் ''எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்படியக்கடவன். தேவனாலேயன்றி ஒரு அதிகாரமும் இல்லை'' என்று போதிக்கிறார்.

புறஜாதிகளுக்கு கொடுக்கப்பட்ட அந்த காலம் முடியும் வரை, எப்படி தேவன் தம்முடைய பூமிக்குரிய இராஜ்யத்தையோ அல்லது ஆவிக்குரிய இராஜ்யத்தையோ முழுவதுமாக ஸ்தாபிக்க மாட்டாரோ, அதைப்போல, தேவையான ஏற்பாடுகள் செய்து வந்தாம், மாம்சீக இஸ்ரயேலர்கள் அந்த குறிப்பிட்ட காலம்வரும்வரை, தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணபட்டதை சுதந்தரித்துக் கொள்ள முடியாது.

அந்நாளில், யூதர்களுக்கு இராஜாவாக மாத்திரமல்ல, பூமியெங்கும் இராஜாவாயிருக்கப் போகிற மேசியாவின் மகிமையான பிரசன்னம்வரை, அதாவது புறஜாதியாரின் காலம் முடியும்வரை, தேவனுடைய பிள்ளை களிடத்திலிருந்து (மாம்சத்திற்குரிய மற்றும் ஆவிக்குரிய சந்ததியிடமிருந்து) கிரீடமானது நீக்கப்பட்டிருக்கும். ''சமாதானக்கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதுமில்லை, நியாயப்பிரமாணிகன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதுமில்லை'' என்று ஆதி 49:10இல் பார்க்கிறோம். இஸ்ரயேலிட மிருந்து கிரீடம் நீக்கப்பட்ட காரியம், மேலே சொல்லப்பட்ட வாக்குத் தத்தத்திற்கு முரண்பாடாயிருக்கிறது என்றுசிலர் நினைக்கலாம். எனினும் கிரீடத்திற்கும், செங்கோக்குமுள்ள வித்தியாசத்தைக் கவனிக்க வேண்டும். கிரீடமானது சிதேக்கியா இராஜாவின் காலத்தில் நீக்கப்பட்டாம், அதற்கு பிறகு, மாம்ச பிரகாரம் யூதா கோத்திரத்தாரும், தாவீதின்குமாரனும், தேவனால் இராஜாவாக அங்கீகரிக்கப்பட்டவருமாகிய, நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து, 639 வருடங்களுக்குப் பிறகு, நீண்டகாலம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதற்கு, ஏற்ற ஒரே உரிமக்காரராகும் மட்டும், அந்த செங்கோல் நீக்கப்படவில்லை என்பதை நாம் காண்கிறோம்.

ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையானது ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் உறுதி செய்யப்பட்டது. அந்தவாக்குத்தத்தம் என்னவெனில்,



உலகத்தில் அவர்களது சந்ததியை ஆசீர்வதித்து, உயர்த்துவதோடு மட்டுமல்லாமல், பூமியின் ஜாதியனைத்தையும் ஆசீர்வதிக்கக்கூடிய பெரிய இரட்சகர் அவர்களுடைய சந்ததியிலிருந்துதான் எழும்ப வேண்டும் என்பதாகும். நியாயப்பிரமாணிகனும், மீட்பனுமாகிய மோசேதான் அந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவரோ என்று நினைக்கும் அளவிற்கு இருந்தது. ஆனால் மோசேயோ, ''என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை உங்கள் தேவனாகிய யேகோவா, உங்கள் சகோதரர் நடுவே எழும்பப்பண்ணுவார்'' என்று சொன்னதின் மூலம், தனக்குப்பின் வருகிறவருக்கு, தான் ஒரு முன்னடையாளம் என்று சுட்டிக் காண்பித்தார். அதன்பின் அவரும் மரித்தார். அடுத்த வாக்குத்தத்தமாகிய ''செங்கோலானது யூதாவை விட்டு விலகுவதில்லை'' என்பதிலிருந்து, எதிர்பார்த்தல் எல்லாம் யூதாக் கோத்திரத்தை மட்டுமே சார்ந்ததாயிற்று. மற்ற ஏனைய கோத்திரங்களும் யூதாக்கோத்திரத்தோடு சேர்ந்து, தேவன் செய்த வாக்குத்தத்தத்தின் மேல் நம்பிக்கை உள்ளவர்களாய், யூதா வழியாக வரும், ஆசீர்வாதத்தை குறித்த காலத்தில் எதிர்பார்த்திருந்தனர்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியில் தோன்றிய தாவீது இராஜாவின் பெரிய வெற்றிகள் எல்லாம், ஜாதிகள் அனைத்தையும் நியாயப் பிரமாணத்திற்கு கீழ்ப்படுத்தி, உலகமுழுவதும் பரவி, உலகத்தை ஆளக்கூடிய இராஜ்யத்தை ஸ்தாபிப்பான் என்று எதிர்பார்க்கக் காரணமாயிருந்தது. சாலமோன் இராஜாவின் ஞானமும், அவரது புகழும் உச்சக் கட்டத்திலிருந்த போது, அவர்கள் மூலமாக உலகப்பொது இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு விட்டதோ என்று எண்ணுமளவிற்கு இருந்தது. ''நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப் பிறப்பாகிய உன்சந்ததியை எழும்பப் பண்ணி, அவனுடைய சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைப்படுத்துவேன்'' என்று தேவன் தாவீதோடு செய்த வாக்குத்தத்தத்தின்படி யூதாக் கோத்திரத்தின் ஒரு குடும்பத்திற்கு மட்டுமே அந்த வாக்குத்தத்தம் சார்புடையதாக ஆக்கப்பட்டது. அதற்கேற்ற வண்ணமே அக்குடும்பமும் இராஜ்யபாரத்தை ஏற்கனவே பெற்றிருந்தது. சாலமோனுடைய ஆலயம் கட்டப்பட்டபோது, அதிலிருந்து நூற்றுக்கணக்கான பாடகர்களும், ஆசாரியர்களும் ஆலயத்திற்கு மெருகூட்டினர். சாலமோனின் ஞானத்தினாம், செல்வத்தினாம் அவரது புகழ் உலகெங்கும் பரவியிருந்தது. பல்வேறு இராஜாக்களும், அவருடைய நட்புப் பெற வெகுமதிகளை அனுப்பினர். மேம் இதுவரை உலகம் கண்டறியாத அதிசயமும், புகழும் நிறைந்த இராஜாவாகிய சாலமோனைக்காண சீபா நாட்டு இராணியும் வெகுமதியோடு வந்தாள். இவையெல்லாவற்றையும்

பார்க்கும் போது ஆபிரகாமின் சந்ததி உயர்த்தப்படுவதற்கும், அவர்கள் மூலமாக எல்லா ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதற்கும், அவர்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த சமயம் வந்து விட்டது என்று எண்ணி யூதர்களின் இருதயம் நம்பிக்கையினாம், பெருமிதத்தினாம், குதூகலித்ததில் அதிசயமேதுமில்லை.

சாலமோனின் மறவுக்குப்பின் இராஜ்யம் சின்னாபின்னமாக்கப்பட்டு இறுதியில் முழுவதுமாக கவிழ்க்கப்பட்டது. தேவனுடைய பரிசுத்த ஜாதியாயிருந்து, எல்லாஜாதிகளையும் ஆண்டு ஆசீர்வதிப்போம் என எதிர்பார்ந்திருந்த மக்கள், பாபிலோனுக்கு சிறபட்டு போனதினிமித்தம் ஏற்பட்ட ஏமாற்றத்தினால், அவர்களது உள்ளம் துன்பத்தத் தழுவியது. இதத்தான் ''பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து. அங்கே சீயோனை நினத்து அழுதோம்'' என்று சங்கீதம் 137:1இல் பார்க்கிறோம்.

கிரீடமும், தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளக்கூடிய அதிகாரமும்கூட அவர்களை விட்டு நீக்கப்பட்டாம், ஆளுகிற உரிமை (செங்கோல்) தேவ வாக்குத்தத்தத்தின்படி, அவர்களை விட்டுநீக்கப் படவில்லை. உலகப்பொது ஆளுகை நேபுகாத் நேசாருக்கும், அவனுக்குப் பின்வந்தவர்களுக்கும் பெரிய மனிதசில, நான்குவித மிருகங்களின் விளக்கத்திற்கு ஏற்ப கொடுக்கப்பட்டாம், அதுகுறிப்பிட்டகாலம் வர மட்டுமே நிலத்திருந்தது. இஸ்ரயேலருக்கு முதன் முதலில் கொடுக்கப் பட்ட வாக்குத்தத்தம் நிறவேற்றப்பட வேண்டும். கிரீடம் நீக்கப்பட்டது. ஆனால் செங்கோல் மேசியா வருமட்டும் நீக்கப்படவில்லை. இந்த விஷயம் சிதேக்கியாவிற்கு எதிராக ''கிரீடத்த எடுத்துப்போடு; அதக்கவிழ்ப்பேன்; உரிமக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும். அவருக்கே நான் அதக் கொடுப்பேன்'' என்று கொடுக்கப்பட்ட கட்டளையில் கூட குறிப்பிடப்பட்டது.

ஆபிரகாமோடு உடன்படிக்க செய்யப்பட்ட போது, அவனது சந்ததி மூலமாக இவ்வுலகம் ஆளப்பட்டு, ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. ஆபிரகாமின் பிள்ளைகளாகிய இஸ்ரயேலரோடு மட்டுமே நியாயப்பிரமாண உடன்படிக்க செய்யப்பட்டது. இவர்களுள், நியாயப் பிரமாணத்திற்கு முற்றிமாக கீழ்ப்படிகிறவர்கள் மட்டுமே, ஆபிரகாமின் உடன்படிக்கயின் மூலம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட, அதாவது, உலகத்த ஆண்டு ஆசீர்வதிக்கக்கூடிய உரிமைய பெறுவோம் என்ற நம்பிக்கயப் பெறமுடியும். ஆனால், இது, தாங்கள்தான் நியாயப் பிரமாணத்தின் ஒவ்வொரு காரியத்தயும் சிறு குறயில்லாமல் நிறவேற்றுபவர்கள் என்றும், தங்கள நீதிமான்களாயும், மற்றவர்கள



அற்பமாயும் எண்ணி மற்றவர்கள ஆயக்காரரென்றும், பாவிகள் என்றும் அழத்து, தங்களைத் தாங்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்றும், இவ்வுலகத்த ஆசீர்வதிக்க வாக்குத்தத்தம் பெற்ற சந்ததி என்றும், உரிம கொண்டாடும் பரிசேயர் என்ற ஒருபிரிவினர் தோன்றுவதற்கு காரணமாயிருந்தது.

நியாயப்பிரமாணத்தின் சிறு உறுப்பாகிம், எழுத்தாகிம் மாறாதபடி கக்கொள்ளாமல், அதனுடைய சிலவெளிப்புடயான சடங்காசாரங்கள மட்டும் கடபிடித்து வருகிற பரிசேயர்களின் தவறுகள கடிந்து கொள்வது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் போதகத்தில் ஒன்றாகும். பூரணமும், முழுமயுமான நியாயப்பிரமாணத்த, விழுந்து போன அபூரண மனிதன், தன்னுடைய பெலகீனத்தினாம், சோதனயினாம், முழுமையாக நிறவேற்றவோ அல்லது ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதத்துக்கு பாத்திரராக இருக்கவோ முடியாது என்று, தற்போதய கிறிஸ்தவர்கள் அறிந்திருக்கும் இக்காரியத்த, கிறிஸ்து அப்போதே அவர்களுக்குப் போதித்தார். எந்த அபூரண மனிதனாம் நிறவேற்ற முடியாத நியாயப்பிரமாணத்த, பரிசேயர்கள் நிறவேற்றாமல் தவறினதயோ அல்லது அவர்கள் நியாயப்பிரமாணத்த நிறவேற்ற முயன்றதயோ, கிறிஸ்து குறகூறினார் என்று நாம் புரிந்து கொள்ளக் கூடாது. பரிசேயர், தங்களைத் தூய்மயானவர்கள், பரிசுத்தமானவர்கள் என்றுகூறி தங்களையும், பிறரயும் ஏமாற்றிய கபடத்தத்தான் குறகூறினார். பரிசேயர்கள் வெளிப்பார்வக்குத்தூய்மயானவர்களாக இருந்தார்களே அல்லாமல், உள்ளத்திலோ தூய்மயற்றவர்களாகவும், அபிஷேகம் பெறாதவர்களாகவும் இருந்தனர். அவர்கள் வெளிப்பார்வக்கு பக்தியுள்ளவர்களாய் இருந்து, உதட்டளவில் தேவன கனம்பண்ணி, உள்ளத்தினால் தேவனுக்கு விலகியிருப்பதயே கிறிஸ்து குறகூறினார். நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவும், அப்போஸ்தலனாகிய பவும் கூறுவதற் கேற்ப, அவர்களில் எவராம் நியாயப்பிரமாணத்த நிறவேற்றவோ கீழ்ப்படியவோ (யோவான் 7:19; ரோமர் 3:20) முடியவில்லை. நியாயப் பிரமாணத்த நிறவேற்றத் தேவயானவகள, அவர்கள் அறிந்திருந்தும், அத அவர்கள் செய்யவுமில்லை.

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல, பிறனிடத்திம் அன்பு கூறுவாயாக

என்று நியாயப்பிரமாணத்தின் முழுக்கருத்தயும், கிறிஸ்து தம்முடய வார்த்தகளினால் மாத்திரம் கூறாமல், தம்முடய வாழ்க்கயில் நிற வேற்றியும் காண்பித்தார். தேவனுடய திட்டத்திற்கும் விருப்பத்திற்கும் தம்மத் தாமே ஒப்புக்கொடுத்தது மட்டுமல்லாமல், தன்னலம் கருதாமல் தம்முடய சுயசித்தத்தயும் திட்டத்தயும் விலக்கினார். கிறிஸ்து தம்ம முழு இருதயத்தோடும், உள்ளத்தோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, தம்ம நேசிப்பது போல பிறரயும் நேசித்து, தம்மரண பரியந்தம் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்.

எனவே எந்த அபூரண மனிதனும் நிறவேற்றக் கூடாதிருந்த நியாயப் பிரமாணத்த கிறிஸ்து முற்றிமாக கடபிடித்து நிறவேற்றி, சீனாய் மலயில் இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கயின் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் சுதந்திரரானார். ஆபிரகாமுக்கு செய்த வாக்குத்தத்தத்தின்படி கிறிஸ்துதான் ஆபிரகாமின் சந்ததி என்று ரூபகாரபடுத்தப்பட்டார். யூதாக்கோத்திரத்தில், தாவீதின் குடும்பத்தில் தோன்றும் ஒருவருக்கே, பல நூற்றாண்டு காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இந்த நீதியின் செங்கோல (வாக்குத் தத்தத்தின்படி கிடத்த அதிகாரத்த அல்லது, இவ்வுலகத்த ஆளும் அதிகாரத்த) கிறிஸ்து தம்மிடம் நிலநிறுத்திக்கொண்டார். இஸ்ரயேல் மக்களால் பல நூற்றாண்டுகாலமாக எதிர்பார்க்கப்பட்டு, நம்பப்பட்டு அதற்காகப் பிரயாசப்பட்டு அடய இருந்த மாபெரும் பரிச, யூதாக் கோத்திரத்துசிங்கம்,கப்பற்றினார். மேசியா அல்லது சமாதானக்காரர் என்று அழக்கப்படுபவர் வந்து, மரணத்தினால் அடிமப்பட்டிருந்த மனுக்குலத்த சிலுவயில் தம்முடய இரத்தத்த சிந்தியதின் மூலம் விடுவித்து, மனிதனுக்கும் தேவனுக்கும் இடயே, சமாதான உறவ ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அவர் இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா என்று அழக்கப்பட்டு அதிகாரத்தப் பெறும் போது, எல்லாப் பாவத்தயும், தீமயயும் நீக்கி பரிசுத்தத்தின் அடிப்படயில் சமாதானத்த ஸ்தாபிப்பார். அவர் தான் சமாதானத்தின் பிரபு ஆவார்.

உடன்படிக்கயின் கீழான செங்கோலானது, நம்முடய கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு, சென்றபோது, நியாயப்பிரமாண உடன்படிக்க முடிவுடந்தது. எனவே மேசியாவால் வெல்லப்பட்ட பரிச, தேவன் எந்த நிபந்தனயின் பேரில் மற்றவர்களுக்குக் கொடுக்க எண்ணங்கொண்டிருக்க



முடியும்? எனவே அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வது போல், கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருந்து, அதத் தம்முடய மரணத்தில் சிலுவயின் மேல் ஆணியடித்தார் (கொலோசெயர் 2:14).

இப்படியாக நம்முடய சமாதான பிரபு, வேறு எந்த விதத்தினாம் கொண்டு வர முடியாத பாவமன்னிப்பயும், இழந்ததத் திரும்பக் கொடுத்தலயும், என்றென்றும் அழியாத இராஜ்யத்தயும், தம்முடய நீதியின் அடிப்படயில் ஸ்தாபித்தார். இந்தக் காரியமானது, சமாதானக் கர்த்தர் வருமளவும், செங்கோல் யூதாவ விட்டு நீங்குவதுமில்ல; நியாயப் பிரமாணிகன், அவன் பாதங்கள விட்டு ஒழிவதுமில்ல என்ற தீர்க்க தரிசனத்த நிறவேற்றக்கூடியதாக இருந்தது. பிறகு அந்த செங்கோலானது, யூதாக்கோத்திரலிருந்து வந்த சிங்கமாகிய இராஜாதிராஜா, கர்த்தாதி கர்த்தா என்றழக்கப்படுபவரிடம் கொடுக்கப்படுகிறது.

தேவனுடய வாக்குத்தத்தத்தின் மீது விசுவாசம் வத்து, இஸ்ரயேலின் ஆறுதல் வரக் காத்திருந்த சிலர் மட்டுமே, 70 வருட பாபிலோனின் சிறயிருப்பிற்குப் பிறகு, தம் தேசத்திற்குத் திரும்பி, ஆலயத்தயும், நகரத்தின் சுவரயும் கட்டினர். இப்படிப்பட்ட காரியங்கள் நியாயப்பிரமாணிகனும், மீட்பரும், மேசியாவும், சமாதானக்காரருமாகிய கிறிஸ்து இந்தக் கோத்திரத்தில்தான் வருவார் என்ற தேவனின் வாக்குத்தத்தத்த நினவு கூற செய்து, அவர்கள ஒன்று கூட்டியது. ஆனால் தமது சிலுவ இரத்தத்தால் அக்கிரமத்த நிவர்த்தி செய்து, அமதிய ஏற்படுத்துபவர் வந்த போதோ, அவர்கள் மகா பிரதான ஆசாரியன எதிர்பாராமல், தங்கள இரட்சிக்க ஒரு இராஜாவ எதிர்பார்த்தபடியால், அவுர ஏற்றுக்கொள்ள மறுத்து மறுதலித்தனர்.

மேசியா தம்முடய மரணபரியந்தமும் தம்மத் தாமே தாழ்த்தினபடியால், உயிர்தெழுதலில் செங்கோலயும் எல்லா அதிகாரத்தயும் பெற்றுக்கொண்டு, முதன்முதலில் இஸ்ரயேலர்கள, (மாம்சீக இஸ்ரயேலர அல்ல, ஏனெனில் அவர்கள் மாம்சத்தின்படி இஸ்ரயேலராக இருந்தாம் அவர்கள், உண்மயான இஸ்ரயேலர் அல்ல ரோமர் 9:6) அதாவது ஆவிக்குரிய இஸ்ரயேலர ஆசீர்வதிப்பார். சுதந்தரராகிய மேசியா, ஆவிக்குரிய ஆபிரகாமின் பிள்ளகள அதாவது ஆபிரகாமின் விசுவாசத்தயும், கீழ்ப்படிதலயும் பெற்றுள்ள பிள்ளகள, ஆபிரகாமின் சந்ததியினின்றும், புறஜாதி மக்களின்றும் தம்முடய நாமத்திற்காகத் தெரிந்தெடுத்துக்கொண்டிருக்கிறார் (அப் 15:14). அதன்

பிறகு (தெரிந்தெடுக்கப்பட்ட சபயா,ர புறஜாதியாரின் காலத்தின் முடிவில் அதாவது சுவிசேஷயுக அறுப்பின் காலத்தில் கூட்டிசேர்த்த பின்பு) அவர் தமது கிருபுய உருவழிந்த இஸ்ரயேக்குக் காட்டி, ஆத மீண்டும் எடுப்பித்துக் கட்டுவார். இறுதியில், பூமியின் மீதுள்ள சகல மக்கள் மீதும், தமது கிருபுயக் காட்டி, அவர்கள் இருதயம் இதுவுர கண்டிராத ஒரு நல்ல நிலயில் அவர்களு ,வப்பார். இப்போது செங்கோ,ல பெற்றிருக்கிற உரிமக்காரனானவர், புறஜாதியாரின் முடிவுக்காலத்தில் கிரீடத்தயும் பெறுவார். ஜனங்கள் அவரிடத்தில் சேர்வார்கள் (ஆதி 49:10). வானத்தின் மேம், பூமியின் மேம் சகல அதிகாரத்திற்குரிய மேலான நாமமானது (செங்கோல்) அவரது உயிர்த்தெழுதலில் அவருக்குக் கொடுக்கப்பட்டது. மேசியா தம்முடய சகல அதிகாரத்தயும் பெற்று, மகிமயான ஆளுகய ஆரம்பிப்பதற்கு, பிதா குறித்து ,வத்துள்ள புறஜாதியாரின் காலம் நிறவேறும் வுர காத்திருக்கிறார் (வெளி 11:17,18).

புறஜாதியாரின் காலமானது 2520 வருடங்கள் கொண்டது என்றும், அது கி.பி. 1914ஆம் ஆண்டு முடிவுடகிறது என்புதயும் நிரூபிப்பதற்கு முன்பு, அது கி.மு. 606இல் ஆரம்பித்தது என்று நாம் முதலில் கண்டு பிடித்தத இப்போது நினவில் ,வக்க வேண்டும்.

இந்த கருத்துக்களு நாம் பல வசனங்களின் மூலம் அறிந்து கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படி அந்தக் கருத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்குமேயானால், அந்த விஷயங்கள் குறித்த காலத்திற்கு முன்பே தெரியவந்திருக்கும். எனவேதான் தானியேல் 12:4,10இல் முடிவு கால மட்டும் புத பொருளாக மூடிவக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

''புறஜாதியாரின் காலம் நிறவேறும் வுரக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்'' என்ற நமது கர்த்தரின் வார்த்தகளிலிருந்து புறஜாதியார்களின் காலமானது, ஒரு வுரயுறக்குட்பட்ட காலப் பகுதியக் கொண்டது என்புத மட்டுமல்லாமல், மாம்ச இஸ்ரயேலரும், ஆவிக்குரிய இஸ்ரயேலரும் புறஜாதியார்களுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்புதயும் உணர்ந்து கொள்கிறோம். மேம் இந்தக் காலப்பகுதிகள் மாம்ச இஸ்ரயேலரோடும், அவர்களது பூமிக்குரிய நகரமாகிய எருசலேமோடும் தொடர்புள்ளது என்புதயும் அது உணர்த்துகிறது. இஸ்ரயேலின் சரித்திரத்தப்பற்றி கூறிய தேவன், இந்த புறஜாதியாரின் காலம் எவ்வளவு என்புதயும் துல்லியமாக முன் கூட்டியே சொல்லியிருக்கமாட்டாரா என்ற எண்ணம் தோன்றுகிறதல்லவா? ஆம்!



உலகப் பிரகாரமான லட்சணத்திற்குரிய ஆசீர்வாதத்தயும், தண்டனயயும் லேவியராகமத்தில் பார்க்கிறோம். இஸ்ரேல் மக்கள் தேவனுக்கு உண்மயாக கீழ்ப்படிந்து நடப்பார்களேயானால் மற்ற ஜாதிகளக் காட்டிம், அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்; இல்லாவிட்டால், அவர்கள் சத்துருக்கள் அவர்கள் மீது விழுவார்கள். அதக் குறித்து வேதம் கூறுவதாவது; ''நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன்; நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். நீங்கள் எனக்கு செவி கொடாமம், இந்த கற்புனகள் எல்லாவற்றின்படியும் செய்யாமம் இருந்தால் நான், உங்களுக்கு விரோதமாக என் முகத்தத் திருப்புவேன்; நீங்கள் உங்கள் சத்துருவுக்கு முன்பாக முறிய அடிக்கப்படுவீர்கள்; அவர்கள் உங்களு வெறுத்துத்தள்ளி உங்களு ஆளுவார்கள்; நீங்கள் விதக்கும் வித விருதாவாயிருக்கும்; உங்கள் சத்துருக்கள் அதன் பலன தின்பார்கள்; இவ்விதமாக நான் உங்களுக்கு செய்தும், நீங்கள் இன்னும் எனக்கு செவி கொடாதிருந்தால் உங்கள் பாவங்கள் நிமித்தம் பின்னும் ஏழத்தனயாகத் தண்டிப்பேன்''. (லேவி 26:12,14,16,17,18,24,28)

